# சங்கரன்கோவில் நகராட்சி

**2018ம் ஆண்டு ஜனவரி 31.01.2018ம் தேதி khiy 4 மணிக்கு தனி அதிகாரியால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

பொருள் எண் – 264

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2017, டிசம்பர் 2017 மற்றும் ஜனவரி 2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின்பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 265

சங்கரன்கோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான தேவையான பிளிச்சிங் பவுடர் விநியோகம் செய்ய 19.1.2018ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை குறிப்பிட்டுள்ள Nagaa Chemicals 19/10, Big Street, Chokampatti நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகாரத்திற்காக (கோப்பு எண்.2926/2017/எச்1)

| வ. எண் | வேலையின் பெயர் | கிலோ / லிட்டர் / எண்ணம் ஒன்றிற்கு | Nagaa Chemicals 19/10, Big Street, Chokampatti | திரு.கே.கற்பக செல்வம், சொக்கம்பட்டி |
|---|---|---|---|---|
| 1. | பிளிச்சிங்பவுடர் | 1 கிலோ | ரூ.33/– + GST . Tax | ரூ.36 + GST . Tax |

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 266

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு முதல் நிலை சேகரிப்பு பணிக்கு தனியார் நிறுவனம் மூலம் 85 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 2 துப்புரவு பணிமேற்பார்வையாளர்களை தேர்தெடுத்து பணி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி கடிதம் எண் 30453/பி3/2017. நாள்.29.12.2017 படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக செயல்படுத்திட 2ம் நிலை சேகரிப்பு பணிக்கு இரண்டு வாகனம் மூலம் நகராட்சி உரகிடங்கிற்கு குப்பைகளை கழிவுகளை கொண்டு செல்லும் பணியில் முதன்மை சேகரிப்பு பணியுடன் கூடுதலாக இரண்டாம் நிலை சேகரிப்புக்கும் சேர்த்து தனியார் நிறுவனம் மூலம் பணி செய்ய ஒப்பந்தபுள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (கோப்பு எண்.1967/2017/எச்1)

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 267இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் வாகனம் TN Y5630–ன் வாகனத்தின் தகுதிச்சான்று 08.03.2018–ல் முடிவடைவதாகவும், மீண்டும் தகுதிச்சான்று பெற பழுதுவேலைகள் செய்வதற்கும் அதற்காகும் செலவினம் ரூ.45000/– க்கும் மேற்கொள்வதற்கும் அனுமதி வேண்டி ஓட்டுனர் தனது 31.01.2018 ந் தேதிய விண்ணப்பத்தின்படி கோரியுள்ளார். எனவே மேற்கண்ட விண்ணப்பத்தின்படி டம்பர் பிளேசர் வாகனம் பழுது பார்க்க ஒப்பந்தபுள்ளி பெறவும் அதற்கான செலவினத்துடன் கூடுதலாக அரசு நிர்ணயம் செய்துள்ள GST வரி செலவினமும் சேர்த்து மேற்கொள்ளவும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உச்சவரம்பினைவிட கூடுதலாகும் செலவினத்தினை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் பின்னேற்பு பெறவும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (கோப்பு எண்–0224/2018/எச்1)

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 268

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 27 சங்குபுரம் 2ம் தெரு மேல் பகுதிய்ல் சுமார் 20 குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு குடிநீர் சரியாக வருவதில்லை மேற்கண்ட பகுதி பொது மக்களுக்கு சீராக குடிநீர் வழங்குவதற்கு 4”சுலிஸ்வால்வு மற்றும் 4” PVC Pipeline அமைத்து குடிநீர் விநியோகம் சரி செய்யும் பணிக்கு ரூ.85000/–க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க. எண் 2801/2017/இ1)

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 269

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட ராஜபாளையம் சாலையில் உள்ள திருவள்ளுவர் பூங்கா மேல்நிலை நீர்த்தேங்கத் தேட்டி 8.00 இலட்சம் கொள்ளவு கொண்ட இத்தொட்டியில் தாமிரபரணி கூட்டுகுடிநீர் திட்டத்தின் மூலமாக தினமும் பெறப்பட்ட குடிநீருக்கு குளோரினேசன் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது, எனவே பூங்கா மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் LiQuid chlorination oant அமைப்பதற்கும் மற்றும் பேருந்து நிலையத்தில் உள்s O.H.T-யில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 4.40.இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது, மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பொருள் எண் – 270

சங்கரன்கோவில் நகராட்சிப்பகுதியில் தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் தொந்தரவு ஏற்பட்டு வருவதாக அடிக்கடி புகார்கள் வரப்பெறுவதால் அவற்றை கட்டுப்படுத்துவதற்கு விலங்குகள் நலவாரியம் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ள தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி பணி செய்திடவும் அதற்கான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரவும், பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது. (கோப்பு எண்.2830/2012/எச்1)

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

நாள் – 31.01.2018

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.